# இயல் - 2- சிலப்பதிகாரம்

**வகுப்பு : VI**

**பாடம் : தமிழ்**

## அ. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. கழுத்தில் சூடுவது ------

அ) தார்  ஆ) கணையாழி  இ) தண்டை  ஈ) மேகலை

2. கதிரவனின் மற்றொரு பெயர் -------

அ) புதன்  ஆ) ஞாயிறு  இ) சந்திரன்  ஈ) செவ்வாய்

3. வெண்குடை என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது

அ) வெண் + குடை  ஆ) வெண்மை + குடை

இ) வெம் + குடை  ஈ) வெம்மை + குடை

4. பொற்கோட்டு என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது

அ) பொன் + கோட்டு  ஆ) பொற் + கோட்டு

இ) பொண் + கோட்டு  ஈ) பொற்கோ + இட்டு

5. கொங்கு + அலர் என்பதனைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல்

அ) கொங்குஅலர்  ஆ) கொங்அலர்

இ) கொங்கலர்  ஈ) கொங்குலர்

6. அவன் + அளிபோல் என்பதனைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல்

அ)அவன்அளிபோல்  ஆ) அவனளிபோல்

இ)அவன்வளிபோல்  ஈ) அவனாளிபோல்

## ஆ. நயம் அறிக.

1. பாடலில் இடம்பெற்றுள்ள மோனைச் சொற்களை எடுத்து எழுதுக .

**மேல்** நின்று - **மே**ரு

AAMSKOSAVAPATTY

**2. பாடலில் இடம்பெற்றுள்ள எதுகைச் சொற்களை எடுத்து எழுதுக.**

கொங்கு - திங்கள்

## இ. குறுவினா

**1. சிலப்பதிகாரக் காப்பியம் எவ்வெவற்றை வாழ்த்தித் தொடங்குகிறது?**

சிலப்பதிகாரக் காப்பியம், 'திங்களைப் போற்றுதும் திங்களைப் போற்றுதும் ' என்று சந்திரனையும், ஞாயிறு போற்றுதும் ஞாயிறு போற்றுதும் 'என்று சூரியனையும்,' மாமழை போற்றுதும் மாமழை போற்றுதும், என்று மழையையும் வாழ்த்தித் தொடங்குகிறது.

**2. இயற்கை போற்றத்தக்கது ஏன்?**

உயிர் வாழ்க்கைக்குக் கதிரவனது ஒளி தேவை. மழை இல்லை என்றால் பூமியில் புல் கூட முளைக்காது.

மலைகள் நீரின் கருவூலங்கள். காடுகள் மழையைப் பெய்விப்பன.

இயற்கை ஆனது அழகின் இருப்பிடம் அழகிய பொருளால் என்றும் அடைவது ஆனந்தமே.

இயற்கைப் பொருட்களை இறை வடிவங்க ளாகக் காண்பது நம்மரபு. இந்தக் காரணங்களால் இயற்கை போற்றத்தக்கதாய்த் திகழ்கிறது.

## ஈ. சிந்தனைவினா

**1. இயற்கையைப் போற்றும் வழக்கம் ஏற்படக் காரணமாக எவற்றைக். கருதுகிறீர்கள்?**

இயற்கையைப் போற்றும் வழக்கம் ஏற்பட முதற்காரணம் மனிதர்களிடத்து இருக்கும் அச்ச உணர்வே ஆகும்.

நம் நாட்டில் மட்டுமே அல்லாமல் உலகம் முழுவதும் உள்ள நாடுகளிலும் இயற்கையைப் போற்றும் வழக்கம் அச்சத்தினால் தோன்றியதே. கொல்லுலைத் தெய்வம் என ரோமர்கள் போற்றினர். நாம் தீக்கடவுள் அக்னித்தேவன் என்கிறோம். மழை பெய்கிறது.

காற்றடிக்கிறது. இடிகுமுறுகிறது. மின்னல் வெட்டுகிறது. இவையெல்லாம் தெய்வங்களாயின. அச்சம் காரணமாக இயற்கையைப் போற்றத் தொடங்குகிறான் மனிதன்.

## 2. காணி நிலம்

### அ. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. கிணறு என்பதைக் குறிக்கும் சொல்---------

அ) ஏரி **ஆ) கேணி** இ) குளம் ஈ) ஆறு

2. சித்தம் என்பதன் பொருள் ----------

**அ) உள்ளம்** ஆ) மணம் இ) குணம் ஈ) வனம்

3. மாடங்கள் என்பதன் பொருள் மாளிகையின் ---------

**அ) அடுக்குகள்** ஆ) கூரை இ) சாளரம் ஈ) வாயில்

4. நன்மாடங்கள் என்னும் சொல்லைப் பிரிக்கக் கிடைக்கும் சொல்_____

அ) நன்+மாடங்கள் ஆ) நற் +மாடங்கள்

**இ) நன்மை + மாடங்கள்** ஈ) நல் + மாடங்கள்

5. நிலத்தினிடையே என்னும் சொல்லைப் பிரிக்கக் கிடைக்கும் சொல்______

அ)நிலம் + இடையே **ஆ) நிலத்தின் + இடையே**

இ)நிலத்து + இடையே ஈ) நிலத் + திடையே

6. முத்து + சுடர் என்பதனைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல்______

அ) முத்துசுடர் ஆ) முச்சுடர் இ) முத்துடர் **ஈ) முத்துச்சுடர்**

7. நிலா + ஒளி என்பதனைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல்______

அ) நிலாஒளி ஆ) நிலஒளி **இ) நிலாவொளி** ஈ) நிலவுஒளி

### ஆ. பொருத்துக.

1. முத்துச்சுடர்போல - **நிலாஒளி**
2. தூய நிறத்தில் - **மாடங்கள்**
3. சித்தம் மகிழ்ந்திட - **தென்றல்**

AAMSKOSAVAPATTY

## இ. நயம் அறிக.

1. காணி நிலம் பாடலில் இடம்பெற்றுள்ள மோனைச் சொற்களை எடுத்து எழுதுக.

பத்து - பக்கத்திலே

முன்பு - முத்து

2. காணி நிலம் பாடலில் இடம்பெற்றுள்ள எதுகைச் சொற்களை எடுத்து எழுதுக.

காணி - கேணி

பத்து - முத்து

## ஈ. குறுவினா

**1. காணி நிலம் பாடலில் பாரதியார் பராசக்தியிடம் வேண்டுவன யாவை?**

காணிநிலம் பாடலில் பாரதியார் பராசக்தியிடம் வேண்டுவன: :காணி அளவு நிலம் வேண்டும்.

அங்கு ஒரு மாளிகை கட்டித்தர வேண்டும். அழகான தூண்களையும் தூய நிறமுடைய மாடங்களையும் அது கொண்டிருக்கவேண்டும்.

நல்ல நீரையுடைய கிணறும் அங்கே இருக்க வேண்டும். இளநீரும் கீற்றும் தரும் தென்னைமரங்கள் வேண்டும். அங்கே முத்து போன்ற நிலவொளி வீச வேண்டும்.

காதுக்கு இனிய குயிலின் குரலோசை கேட்க வேண்டும். உள்ளம் மகிழுமாறு இளந்தென்றல் தவழ வேண்டும்.

**2. பாரதியார் இயற்கையின் மீது கொண்டுள்ள விருப்பம் குறித்து எழுதுக.**

தாம் குடியிருப்பதற்கு மாடிவீடு ஒன்று வேண்டும் என பாரதியார் கருதுகிறார்.சுற்றுப் பகுதியில் கொஞ்சமும் இடம் விடாமல் மனைப் பகுதி முழுவதுமாக மாளிகை அமைந்துவிடக் கூடாது என்று நினைக்கிறார்.

எனவே காணி நிலத்தின் ஒரு பகுதியில் மாளிகை வேண்டும் என்கிறார். மாளிகையருகில் கிணறு இருத்தல் வேண்டும். மாளிகை நீங்கலாக ஏனைய

AAMS KOSAVAPATTY

தரைப் பகுதியில் பத்துப் பன்னிரண்டு தென்னை மரங்கள் வளர்க்க விரும்புகிறார்.

மனதில் மகிழ்ச்சி ஏற்படுத்தும் வகையில் முத்துப் போன்ற நிலவொளி வீசவேண்டும். இளந்தென்றல் தவழ வேண்டும் என்கிறார் . நீர் தாவரம் நிலா தென்றல் என இயற்கைப் பொரு ள்களின் மீ து பாரதியார் கொண்ட விருப்பம் இப்பாடலில் வெளிப்படுகிறது

**உ. சிந்தனைவினா**

**1. பாரதியார் வீட்டின் அருகில் தென்னை மரங்கள் வேண்டும் என்கிறார். நீங்கள் எந்தெந்த மரங்களை வளர்ப்பீர்கள் என எழுதுக.**

தெற்குப் பார்த்து விளங்கும் என் கனவு இல்லத்தின் முன் வாசற் பகுதியில் பக்கத்துக்கு ஒன்று வீதம் அசோக மரம் வைப்பேன் மிகக் கம்பீரமாக நேராக உயரமாக வளரும் அந்த மரங்கள் வாசலில் காவல் வீரர்கள் நிற்பது போல் இருக்கும் .

வீட்டின் முன் பகுதியில் செம்பருத்தி போன்றவைகளை வைத்தால் தெருவில் போகும் ஆடுமாடுகள் முன் கால்களை உயர்த்தி நாக்கை நீட்டிப் பறிக்கும்.

நந்தியாவட்டையின் இலைக் காம்பில் பால் வெளி வருவதால் கால் நடைகள் இந்த மரத்தை நெருங்குவதில்லை. வீட்டின் வலப்பக்கம் ஒரு வேப்பமரம் வளர்ப்பேன் பிற்பகல் வெயிலின் தாக்கம் அதனால் குறையும் வீட்டின் பின்புறம் இரண்டு தென்னையும் ஒரு வாழையும் , வைப்பேன் முருங்கைமரம் கட்டாயம் உண்டு வீட்டின் கீழ் மேல் பக்கங்களில் செம்பருத்தி , கருவேப்பிலைச் செடிகளை வைப்பேன்.

## சிறகின் ஓசை

**அ. உரிய சொல்லைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

1. தட்ப வெப்பம் என்னும் சொல்லைப் பிரிக்கக் கிடைக்கும் சொல்_____.

**அ) தட்பம் + வெப்பம்** ஆ) தட்ப + வெப்பம்

இ) தட் + வெப்பம் ஈ) தட்பு + வெப்பம்

AAMSKOSAVAPATY

2. வேதியுரங்கள் என்னும் சொல்லைப் பிரிக்கக் கிடைக்கும் சொல்______.

அ) வேதி + யுரங்கள் ஆ)வேதி + உரங்கள்

இ) வேத் + உரங்கள் ஈ) வேதியு + ரங்கள்

3. தரை + இறங்கும் என்பதைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல்______.

அ) தரையிறங்கும் ஆ) தரைஇறங்கும்

இ) தரையுறங்கும் ஈ) தரைய்றங்கு ம்

4. வழி + தடம் என்பதைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல்______.

அ) வழிதடம் ஆ) வழித்தடம் இ) வழிதிடம் ஈ) வழித்திடம்

5. சிட்டுக்குருவி வாழ முடியாத பகுதி______.

அ) துருவப்பகுதி ஆ) இமயமலை இ) இந்தியா ஈ) தமிழ்நாடு

ஆ. கோடிட்ட இடங்களை நிரப்புக.

1. மிக நீண்டதொலைவு பறக்கும் பறவை ஆர்டிக்_ஆலா

2. பறவைகள் வலசை போவதைப் பற்றிப் பாடிய தமிழ்ப்புலவர் சத்தி முத்தப் புலவர்

3. பறவைகள் இடம்பெயர்வதற்கு வலசை போதல்_என்று பெயர்.

4. இந்தியாவின் பறவை மனிதர் டாக்டர்_சலீம்_அலி

5. பறவைகள் வலசை போகக் காரணங்களுள் ஒன்று இனப்பெருக்கம்

இ. சொற்றொடர் அமைத்து எழுதுக.

1. வெளிநாடு: நான் சென்ற வருடம் வெளிநாடு சென்றேன்.

2. வாழ்நாள்: மகாத்மா தம் வாழ்நாளை இந்திய விடுதலைக்காக அர்பணித்தார்.

3. செயற்கை: செயற்கை உரங்களைத் தவிர்த்து நிலவளம் காப்போம்.

AAMS KOSAVAPATTY

## ஈ.பொருத்தமான சொல்லைக் கொண்டு நிரப்புக.

1. மரங்களை வளர்த்து **இயற்கையைக்** காப்போம் **செயற்கை** உரங்களைத் தவிர்த்து நிலவளம் காப்போம். (செயற்கை / இயற்கை)

2. வலசைப் பறவைகளின் வருகை தமிழகத்தில் **மிகுந்துள்ளது**. தற்போது சிட்டுக்குருவிகள் எண்ணிக்கை **குறைந்துள்ளது**. (குறைந்துள்ளது / மிகுந்துள்ளது)

## உ. குறுவினா

**1. பறவைகள் எக்காரணங்களுக்காக இடம் பெயர்கின்றன?**

உணவு , இருப்பிடம் தட்பவெப்பநிலை மற்றும் இனப்பெருக்கம் இவற்றிற்காக பறவைகள் இடம் பெயர்கின்றன

**2. வலசையின்போது பறவையின் உடலில் ஏற்படும் மாற்றங்கள் யாவை?**

வலசையின் போது பறவையின் உடலில் ஏற்படும் மாற்றங்கள் தலையில் சிறகு வளர்தல், இறகுகளின் நிறம் மாறுதல், உடலில் கற்றையாக முடி வளர்தல் இவை ஒரு வகைப்பறவை என்று கருதும் அளவிற்குக் கூட சில நேரங்களில் மாற்றங்கள் ஏற்படும்.

## ஊ. சிறுவினா

**1. சிட்டுக் குருவியின் வாழ்க்கை பற்றிச் சிறு குறிப்பு எழுதுக.**

சிட்டுக்குருவி கூடுகட்டி வாழும் பறவையினத்தைச் சார்ந்தது. கூடுகட்டும் காலங்களில் சத்தமிட்டுக் கொண்டே இருக்கும் கூடுகட்டிய பின் மூன்று முதல் ஆறு முட்டைகள் வரை இடும்.

பதினான்கு நாள்கள் அடைகாக்கும். பதினைந்தாம் நாளில் குஞ்சுகள் வெளிவரும். தானியங்கள், புழு பூச்சிகள், மலர் அரும்புகள், இளம் தளிர்கள், தேன் போன்றவை சிட்டுக் குருவியின் உணவாகும். சிட்டுக் குருவியின் குஞ்சுகள் பெரும்பாலும் பூச்சிகளையே உட்கொள்ளும்.

அதனால் தாய்க் குருவி புளுப்பூச்சிகளைப் பிடித்துத் தம் குஞ்சுகளுக்கு ஊட்டிவிடும்.சிட்டுக் குருவியின் வாழ்நாள் பத்து முதல் பதின்மூன்று ஆண்டுகள் ஆகும்.துருவப் பகுதிகள் தவிர மனிதன் வாழும் இடங்களில் எல்லாம் சிட்டுக் குருவிகள் வாழ்கின்றன.

SKC AVADATTY

**2. வலசைப் பறவைகளின் பயணம் பற்றி நீங்கள் அறிந்தவை யாவை?**

உணவு , இருப்பிடம் , தட்ப வெப்பநிலை மாற்றம் இனப்பெருக்கம் இவற்றிற்காகவே பறவைகள் இடம் பெயர்கின்றன. நிலவு, விண்மீன் புவிஈர்ப்புப் புலம் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டே பறவைகள் இடம் பெயர்கின்றன.

பொதுவாக வடக்கிலிருந்து தெற்கு நோக்கியும் மேற்கிலிருந்து கிழக்கு நோக்கியும் பறவைகள் வலசை செல்கின்றன.பறவைகள் தங்களுக்கென ஒரு வழித்தடத்தை தேர்ந்தெடுத்து, அந்தப் பாதையிலேயே பறக்கின்றன.

சில பறவை இனங்கள் அதே பாதையில் தாய் நிலங்களுக்கு திரும்புகின்றன . சில பறவைகள் போவதற்கும் வருவதற்கு - இரு வேறு பாதைகளைப் பயன்படுத்துகின்றன.பயணம் செய்யும் சில வகைப் பறவைகள் இரை ஒய்வு போன்ற தேவைகளுக்காகத் தரை இறங்கும்.இடையில் எங்கும் நிற்காமல் பறந்து , வாழிடம் சேரும் பறவைகளும் உண்டு.

## எ.சிந்தனைவினா

**1. பறவை இனங்கள் அழியாமல் காப்பாற்றப்பட நாம் செய்ய வேண்டியவை பற்றிச் சிந்தித்து எழுதுக.**

பறவை இனங்கள் அழியாமல் காப்பாற்றப்பட ஆல்,அரசு போன்ற மரங்களையும் அவரை, புடலை போன்றகொடிகளையும் வளர்க்கலாம். தோட்டங்களிலும் வயல்வெளிகளிலும் செயற்கை உரங்கள் பூச்சிக் கொல்லி மருந்துகள் ஆகியவற்றைத் தெளிப்பதை தவிர்க்கலாம்.

பறவைகளுக்குக் கேடு உண்டாக்கும் மின்காந்த கருவிகளின் பயன் பாட்டைக் குறைத்திட அறிவியல் ஆய்வுகளை உலகளாவிய அளவில் மேற்கொள்ள வேண்டும்.

## முதலெழுத்தும் சார்பெழுத்தும்

## அ. குறுவினா

**1. முதல் எழுத்துகள் என்பவை யாவை? அவை எதனால் அவ்வாறு அழைக்கப்படுகின்றன?**

உயிர் எழுத்துகள் பன்னிரண்டும்( 12) மெய் எழுத்துகள் பதினெட்டும் (18) ஆகிய முப்பதும் (30) முதல் எழுத்துகள் ஆகும்.பிற எழுத்துகள்

தோன்றுவதற்கும் இயங்குவதற்கும் முதற்காரணமாக இவை இருக்கின்றன. எனவே இவை முதல் எழுத்துகள் என அழைக்கப்படுகின்றன.

**2. சார்பெழுத்துகள் எத்தனை? அவை யாவை?**

முதல் எழுத்துகளைச் சார்ந்து வருகின்ற எழுத்துகள் சார்பெழுத்துகள் எனப்படும். சார்பெழுத்துகள் பத்து வகைப்படும் அவை

1. உயிர் மெய்
2. ஆய்தம்
3. உயிரளபெடை
4. ஒற்றளபெடை
5. குற்றியலுகரம்
6.குற்றிலிகரம்
7. ஐகாரக்குறுக்கம்
8.ஔகாரக்குறுக்கம்
9. மகரக்குறுக்கம்
10. ஆய்தகுறுக்கம்

**3. சொற்களில் ஆய்த எழுத்து எவ்வாறு இடம்பெறும்?**

தனக்கு முன் ஒரு குறில் எழுத்தையும் தனக்கு பின் ஒரு வல்லின உயிர் மெய் எழுத்தையும் பெற்றுச் சொல்லின் இடையில் மட்டுமே ஆய்தஎழுத்து வரும்.

( எ.கா) எ்ஃகு

## திருக்குறள்

**அ.சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

1. மக்களுக்கு மகிழ்ச்சி தருவது ----------------

அ) ஊக்கமின்மை　　**ஆ) அறிவுடைய மக்கள்**

இ) வன்சொல்　　ஈ) சிறிய செயல்

2. ஒருவர்க்குச் சிறந்த அணி ------------------

அ) மாலை　　ஆ) காதணி　　**இ) இன்சொல்**　　ஈ) வன்சொல்

**ஆ. பொருத்தமான சொற்களைக் கொண்டு நிரப்புக.**

1. இனிய **உளவாக** இன்னாத கூறல்

AAMS CAV

கனியிருப்பக் காய்கவர்ந் தற்று

2. அன்பிலார் எல்லாம் தமக்குரியர் அன்புடையார்

என்பும் உரியர் பிறர்க்கு

**இ. நயம் அறிக.**

செயற்கரிய செய்வார் பெரியர் சிறியர்

செயற்கரிய செய்கலா தார்

இந்தக் குறளில் உள்ள எதுகை, மோனைச் சொற்களை எடுத்து எழுதுக

எதுகை: செயற்கரிய - செயற்கரிய

மோனை: செயற்கரிய - செய்வார்

**ஈ. பின்வரும் செய்திக்குப் பொருத்தமான திருக்குறள் எது எனக் கண்டறிந்து எழுதுக.**

2016 ஆம் ஆண்டு ரியோ நகரில் மாற்றுத்திறனாளிகள் ஒலிம்பிக் போட்டி நடைபெற்றது. அதில் தமிழ்நாட்டைச் சேர்ந்த மாரியப்பன் கலந்துகொண்டார். உயரம் தாண்டுதல் போட்டியில் அவர் தங்கப் பதக்கம் பெற்றார். செய்தியாளர்கள் அவருடைய தாயிடம் நேர்காணல் செய்தனர். "என் மகனின் வெற்றி எனக்கு மிகவும் மகிழ்ச்சி அளிக்கிறது. அவனைப் பெற்ற பொழுதைவிட இப்போது அதிகமாக மகிழ்கிறேன்" என்று மகிழ்ச்சியுடன் கூறினார்.

அ) செயற்கரிய செய்வார் பெரியர் சிறியர்

செயற்கரிய செய்கலா தார்

**ஆ) ஈன்ற பொழுதின் பெரிதுவக்கும் தன்மகனைச்**

**சான்றோன் எனக்கேட்ட தாய்**

இ) இனிய உளவாக இன்னாத கூறல்

கனியிருப்பக் காய்கவர்ந் தற்று

AAMSKOSAVAPATTY

## உ. குறுவினாக்கள்

**1. உயிருள்ள உடல் எது?**

அன்பு இருப்பதுதான் உயிருள்ள உடல்.

**2. எழுத்துகளுக்குத் தொடக்கமாக அமைவது எது?**

எழுத்துகளுக்குத் தொடக்கமாக அமைவது அகரம்.

**3. அன்பிலார், அன்புடையார் செயல்கள் யாவை?**

அன்பு இல்லாதவர் எல்லாப் பொருளும் தங்களுக்கே உரியன என வாழ்வர் அன்புடையார்: தம்முடைய பொருள்களும் அல்லாமல் தங்களுடைய உடம்பும் பிறருக்கு உரியன என வாழ்வர்.

## மொழியை ஆள்வோம்

### அ. கீழ்க்காணும் பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடை தருக

இயல்பாகவே தோன்றி மறையும் பொருள்கள், அவற்றின் இயக்கம், அவை இயங்கும் இடம், இயங்கும் காலம் அனைத்தும் ஒன்றிணைந்ததே இயற்கை என்கிறோம். பனிபடர்ந்த நீல மலைகள், பாடித்திரியும் பறவைகள், தன்னிச்சையாகச் சுற்றித்திரியும் விலங்குகள், சலசலக்கும் ஓடைகள், ஆர்ப்பரித்து வீழும் அருவிகள், நீந்தும் மீன்கள், அலைவீசும் அழகிய கடல், கண் சிமிட்டும் விண்மீன்கள், தங்க ஓடமாய்த் தவழ்ந்து வரும் வெண்ணிலா இவையெல்லாம் இயற்கை நமக்குத் தந்த பரிசு. இயற்கையின் அழகை ரசித்தால் மட்டும் போதாது. அந்த அழகை நாம் பாதுகாக்க வேண்டும். நாம் தமது தேவைக்காக மலைகள், காடுகள், விலங்குகள், பறவைகள் ஆகியவற்றை அழித்து வருகிறோம். மேலும் நிலம், நீர், காற்று ஆகியவற்றை மாசுபடுத்தி வருகிறோம். அதனால் இயற்கைச் சமநிலை மாறி புவி வெப்பமயமாகிறது. புவி வெப்பமடையாமல் காப்பது நமது கடமை. இயற்கையைப் பாதுகாத்தால் நாம் நம்மையும் பாதுகாத்துக்கொள்ள முடியும்.

**1. எதனை இயற்கை என்கிறோம்?**

இயல்பாகவே தோன்றி மறையும் பொருள்கள், அவற்றின் இயக்கம், அவை இயங்கும் இடம், இயங்கும் காலம் அனைத்தும் ஒன்றிணைந்ததே இயற்கை என்கிறோம்.

AAMKOSAVATTV

**2. இப்பத்தியில் உள்ள இயற்கையை வருணிக்கும் சொற்கள் யாவை?**

பனிபடர்ந்த நீலமலைகள், பாடித்திரியும் பறவைகள், தன்னிச்சையாகச் சுற்றித்திரியும் விலங்குகள், சலசலக்கும் ஓடைகள், ஆர்ப்பரித்து வீழும் அருவிகள், நீந்தும் மீன்கள், அலைவீசும் அழகிய கடல், கண்சிமிட்டும் விண்மீன்கள், தங்க ஓடமாய்த் தவழ்ந்து வரும் வெண்ணிலா.

**3. இயற்கையை ஏன் பாதுகாக்க வேண்டும்?**

நாம் தமது தேவைக்காக மலைகள், காடுகள், விலங்குகள், பறவைகள் ஆகியவற்றை அழித்து வருகிறோம். மேலும் நிலம், நீர், காற்று ஆகியவற்றை மாசுபடுத்தி வருகிறோம். அதனால் இயற்கைச் சமநிலை மாறி புவி வெப்பமயமாகிறது. புவி வெப்பமடையாமல் காப்பது நமது கடமை. இயற்கையைப் பாதுகாத்தால் நாம் நம்மையும் பாதுகாத்துக்கொள்ள முடியும்.

**4. பத்திக்குப் பொருத்தமான தலைப்புத் தருக.** **இயற்கை வளம்**

**ஆ. கீழ்க்காணும் தலைப்பில் கட்டுரை எழுதுக.**

## இயற்கையைக் காப்போம்

### முன்னுரை

இயற்கை என்பது இயல்பாகவே உருவானவை. அவை இயல்பாகவே தோன்றி மறையும் பொருள்கள். அவற்றின் இயக்கம், அவை இயங்குகின்ற இடம், இயங்குகின்ற காலம் ஆகிய அனைத்தும் ஒன்றிணைந்து காட்சியளிப்பதே இயற்கையாகும். இயற்கையாய் உருவான நிலம், நீர், தீ, காற்று, வானம் என ஐம்பூதங்களால் ஆனது இவ்வுலகம்.

### இயற்கை இன்பம்

இயற்கை அன்னையின் அழகைக் காணக் கண் கோடி வேண்டும். பனிபடர்ந்த மலைகள், பச்சைப் பட்டாடை போர்த்தியும் அதில் வெள்ளிச் சரிகையாய் அருவிகளும் காண்போரைக் கவரும். பல விலங்கினங்களின் உறைவிடமாகத் திகழும் காடுகள், நீர்வாழ் விலங்கினங்களை வளர்க்கும் கடல்,

AAMSKOSAVAPATY

பல கோடி விண்மீன்களையும் சூரியச் சந்திரனையும் தன்னகத்தே வைத்துள்ள வானத்தின் அதிசயத்தையும் கூறவியலாது.

## இயற்கை இன்பத்தை இழக்கிறோம்:

இன்றைய நவீன வாழ்க்கை முறைகளால் இயற்கை மாற்றமடைகின்றது. மலைகளின் சரிவு, இயற்கைச் சீற்றங்களால் ஏற்பட்ட மாற்றங்கள் ஒரு பக்கம். மக்கள் தொகைப் பெருக்கத்தால் காடுகளையும், விளைநிலங்களையும் அழித்து வீடுகளாக்கினோம். தொழிற்சாலைக் கழிவுகளினால் நீரை மாசுபடுத்தினோம். நெகிழிப் பொருட்களை அளவுக்கதிகமாகப் பயன்படுத்தி நிலத்தை மாசுபடுத்தினோம். போக்குவரத்துச் சாதனங்களால் காற்றும் மாசுபட்டது. இவற்றால் புதிய நோய்கள் உருவாகிவிட்டன. வளரும் பிள்ளைகள் நோய்களோடு வளர்வதற்கு நாமே காரணமாகின்றோம்.

## இயற்கைச் சூழல்:

வாழ்வின் அனைத்து அம்சங்களுமே ஒன்றொடொன்று தொடர்புடையவை ஆகும். மனிதர் உள்ளிட்ட அனைத்து உயிரினங்களும் ஒருவரையொருவர் சார்ந்தும் அனைவரையும் காத்துக் கொண்டிருக்கும் உயிர்ச்சூழலைச் சார்ந்துமே வாழ்கிறோம். அனைத்து உயிர்களும் அவற்றைக் காக்கின்ற உயிர்ச் சூழலும் மதிப்புமிக்கவையாக கருதப்படுகிறது. எனவே அவற்றை மதித்து அவற்றைக் காப்பது அவசியமாகும். வாழ்வின் அனைத்து நிலைகளிலும் இயற்கை வேண்டும். இயற்கை மருத்துவம், இயற்கை வேளாண்மை, இயற்கை உணவு என வாழ வேண்டும். இயற்கையான வழிகளில் நிலவளத்தைப் பெருக்கி வேளாண்மை செய்வதை அனைவரும் பின்பற்ற வேண்டும். பக்கவிளைவுகள், ஆபத்தான பின்விளைவுகள் உண்டாக்குகின்ற வேதிப்பொருட்களைத் தவிர்த்து

AAMS KOSAVAPATTY

விட வேண்டும். இயற்கையான மூலிகைகள், காய்கறிகள், பழங்களை விளைவிப்போம்.

**முடிவுரை:**

பொய்யாகவும் துன்பமாகவும் இருக்கும் செயற்கையைப் புறந்தள்ளிவிட்டு, மெய்யாகவும் இன்பமாகவும் இருக்கும் இயற்கையை ஏற்று நடப்போம். அணு ஆயுதம், நீர்நிலை அழிப்பு, சுற்றுச்சூழல் கேடு எனப் பல்வேறு தீமைகளைத் தவிர்த்துவிட்டு, பசுமையான மாற்றங்களைக் கண்டறிந்து எதிர்காலத்தைத் தக்க வழிகளில் மாற்றியமைப்போம்.

## மொழியை ஆள்வோம்

**அ. திரட்டுக.**

**1. கடல் என்னும் பொருள் தரும் வேறு சொற்களைத் திரட்டுக.**

| | | | |
|---|---|---|---|
| 1. அரி | 2. அலை | 3. ஆர்கலி | 4. ஆழி |
| 5. திரை | 6. விரிநீர் | 7. முந்நீர் | 8. பரவை |
| 9. சமுத்திரம் | 10. அழவம் | 11. பெருநீர் | 12. பௌவம் |

**ஆ. தொடர்களைப் பிரித்து இரண்டு தொடர்களாக எழுதுக.**

(எ.கா) பல நாள்களாக மழை பெய்யாததால் பயிர்கள் வாடின.

விடை: பல நாள்களாக மழை பெய்யவில்லை. பயிர்கள் வாடின.

1. கபிலன் வேலை செய்ததால் களைப்பாக இருக்கிறார்.

**கபிலன் வேலை செய்தார் களைப்பாக இருக்கிறார்.**

2. இலக்கியா இனிமையாகப் பாடியதால் பரிசு பெற்றாள்.

**இலக்கியா இனிமையாகப் பாடியனாள் பரிசு பெற்றாள்.**

AAMSKOSAVAPATTY

## இ. பொருத்தமான சொல்லைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. பரந்து விரிந்து இருப்பதால் கடலுக்குப் **பரவை** என்று பெயர். (பறவை / பரவை)

2. இலக்கிய மன்ற விழாவில் முகிலன் சிறப்பாக **உரை** ஆற்றினார். (உரை / உறை)

3. முத்து தம் **பணி** காரணமாக ஊருக்குச் சென்றார். (பனி / பணி)

4. கலைமகள் தன் வீட்டுத் தோட்டத்தைப் பார்க்க வருமாறு தோழியை **அழைத்தாள்**. (அலைத்தாள் / அழைத்தாள்).

## ஈ. பொருத்தமான சொற்களால் கட்டங்களை நிரப்புக.

1. 'புள்' என்பதன் வேறு பெயர் - **பறவை**

2. பறவைகள் இடம்பெயர்தல் - **வலசைபோதல்**

3. சரணாலயம் என்பதன் வேறு பெயர் - **புகலிடம்**

## உ. வரிசை மாறியுள்ள சொற்களைச் சரியான வரிசையில் அமைத்து எழுதுக.

1. இளங்கோவடிகள் காப்பியத்தை என்னும் இயற்றியவர் சிலப்பதிகாரம்.

சிலப்பதிகாரம் என்னும் காப்பியத்தை இயற்றியவர் இளங்கோவடிகள்.

2. மனிதன் உலகில் இல்லாத பறவை வாழ முடியாது.

பறவை இல்லாத உலகில் மனிதன் வாழ முடியாது.

3. மிகப்பெரிய சாண்டியாகோ மீனைப் பிடித்தார்.

சாண்டியாகோ மிகப்பெரிய மீனைப் பிடித்தார்.

4. மனிதர் இந்தியாவின் டாக்டர் சலீம் அலி பறவை.

இந்தியாவின் பறவை மனிதர் டாக்டர் சலீம் அலி

AAMSKOSAVAPATTY

**ஊ. கட்டங்களில் சில சொற்கள் மறைந்துள்ளன. குறிப்புகளைக் கொண்டு அவற்றைக் கண்டுபிடித்து எழுதுக.**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| மு | த் | த | மி | ழ் | கா |
| ப் | பை | னி | மே | ம | ணி |
| ப | ல் | நி | ல | வு | நி |
| து | ட | லை | ர் | ப | ல |
| லை | க | மே | ணி | ம | ம் |
| செ | ங் | கா | ல் | நா | ரை |

1. இரட்டைக் காப்பியங்களில் ஒன்று **மணிமேகலை**.
2. முதலெழுத்துகளின் எண்ணிக்கை **முப்பது**.
3. திங்கள் என்பதன் பொருள் **நிலவு**
4. சத்திமுத்தப் புலவரால் பாடப்பட்ட பறவை **செங்கால் நாரை**.
5. பாரதியார் **காணி நிலம்** வேண்டும் என்று பாடுகிறார்.
6. ஆய்த எழுத்தின் வேறு பெயர் **தனிநிலை**.

AAMS KOSAVAPATHY